RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt20325

# மாணிக்கவாசகரின் பக்தி நெறி

**சி. அமுதா** [அ,*]

[அ] தமிழ்த்துறை, அரசு மகளிர் கலைக் கல்லூரி, புதுகோட்டை-622001, தமிழ்நாடு, இந்தியா.

# Manickavasagar's Devotional Code

**S. Amutha** [a,*]

[a] Department of Tamil, Government Arts College for Women, Pudhukottai-622001, Tamil Nadu, India.

Corresponding Author:
drsatamil@gmail.com

Received: 01-04-2020
Accepted: 09-06-2020

**ABSTRACT**

Tamil literature has the distinction of overcoming time. From the Sangam age to the present day, the literature produced in the Tamil language reflected the linguistic personality of the Tamil scholars. Bhakti literature has a special place in the literature written in tamil language. In bhakti literature, there is an abundance of bhakti literature which removes the darkness of man's ignorance and paves the path of God and helps man to attain liberation through the suppression of mind, body and five elements. Thiruvasagam sung by Manickavasagar as one of the eighth Thirumarai books is unique. There is a proverb that says, 'Thiruvasagathu urugathar oru vasagathukum urugar'. In thiruvasagam, which is in accordance with that language, the songs contain the natural events that take place in the life of a human being. In Thiruvasagam, the glory of the Lord and the dignity of music take place. Thiruporchunnam, Thiruthellenam, Thiruvembavai, etc., contained in this book, are based on various practical activities that take place in the daily lives of the people. Saivism is considered to be one of the foremost religions in Tamil Nadu. It is said that there are four who are considered to be responsible for flourishing at this time. This article will narrate the biography of Manickavasagar, his devotion to Lord Shiva and the significance of the songs he sang to the Lord due to his feeling of devotion.

**Keywords:** Tamil literature, Manickavasagar, Thirumarai, Saivism

## முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் காலத்தை வென்று வாழும் சிறப்புடையன. சங்க காலம் தொடங்கி இக்காலம் வரை தமிழ் மொழியில் படைக்கப்பட்ட இலக்கியங்கள் தமிழ்ச் சான்றோர்களின் மொழி ஆளுமையைப் பிரதிபலிக்கும் தன்மைய கொண்டன. தமிழ் மொழியில் படைக்கப்பட்ட இலக்கியங்களில் பக்தி இலக்கியங்களுக்கென தனிச் சிறப்பிடம் உண்டு. பக்தி இலக்கியத்தில் மனிதனின் அறியாமை எனும் இருளைப் போக்கி இறைவன் எனும் வழியினை வகுத்து மனிதன் மனம் உடல் என பஞ்ச பூதங்களின் அடக்கத்தால் முக்தி எனும் நிலையினை அடைந்திட உதவிடும் பக்தி இலக்கியம் திருவாசகத்தில் ஏராளமாக உள்ளன.

எட்டாம் திருமுறை நூல்களில் ஒன்றாக மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம் தனிச்சிறப்புடையது. 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பது பழமொழி. அம்மொழிக்கேற்ப அமைந்துள்ள திருவாசகத்தில் மனிதனின் வாழ்வில் நடைபெறும் இயல்பான நிகழ்வுகள் பாடல்களில் அமைந்துள்ளன. திருவாசகத்தில் இறைவன் பெருமைகளும், இசை மாண்பும் இடம் பெறுகின்றன. இந்நூலில் அமைந்துள்ள திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருவெம்பாவை போன்றவற்றை மக்களின் அன்றாட வாழ்வில் இடம்பெறும் பல்வேறு நடைமுறைச் செயல்களை அடிப்படையாகக் கொண்டது. தமிழக சமயங்களுள் தலைச்சார்ந்ததாகக் கருதப்பெறுவது சைவ சமயம். இச்சமயம் தழைத்தோங்க காரணமாக கருதப்படுபவர் நால்வர் என்பர். மாணிக்கவாசகர் வாழ்க்கை வரலாறும், சிவபெருமான் மீது அவர் கொண்ட பக்தி உணர்வையும், அப்பக்தி உணர்வால் இறைவன் மீது அவர் பாடிய பாடல்களின் சிறப்பையும் விளக்கி உரைப்பதாக இக்கட்டுரை அமையயுள்ளது.

## மாணிக்கவாசகரின் சிவநெறிக்கொள்கை

சைவசமயக்குரவர் எனப்போற்றப்பெறும் நால்வருள் காலமுறைப்படி நான்காவதாக வைத்துப் போற்றப் பெறுபவர் மாணிக்கவாசகர் என்பது முன்னர் கூறியதே அறியலாம். தேவார மூவருக்கும் காலத்தால் முற்பட்ட திருமூலநாயனார் மேற்கொண்டவராக மாணிக்கவாசகரை அறியமுடிகிறது. அதனை திருமந்திரம் மற்றும் தேவாரத் திருப்பதிகங்களில் உள்ள தொடர்களும் கருத்துக்களும் திருவாசகத்தில் எடுத்தாளப் பட்டிருப்பதிலிருந்து அறியலாம். திருமூலர் கூறும் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மையும் உயிர்களை பற்றியிருக்கும் மும்மலங்கள் குறித்து தமது பாடல்களில் அவர் எடுத்தாண்டிருப்பதனை கூறுகின்றன.

## இறையின்பத்தை அடைந்த மாணிக்கவாசகரின் செயல்பாடுகள்

இறைவன் மீது கொண்ட ஈடுபாட்டின் காரணமாக உள்ளம் உருகி சில சமயங்களில் சிரித்தும், அழுதும், இறைவனை தொழுதும், வாழ்த்தியும் மேனி சிலிர்த்தும் பலவித செயல்பாடுகளுக்குள் ஆளானதாக மாணிக்கவாசகர் கூறுகிறார்.

'நெக்கு நெக்கு உள்உருகி உருகி
நின்றும் இருந்தும் இடந்தும் எழுந்தும்
புக்கு நிற்பது என்று கொல்லோ என
பொல்லா மணியைப் புணர்ந்தே'

என்ற பாடல் வாயிலாக புலப்படுத்துகிறார் (Thantapaanidhesikar, 2017). அன்பு மேலிடும் போது காதலியானவள் காதலனை கொஞ்சி மகிழுவாள். பின் தனது எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் விரும்புவாள். அதுபோல் நாயகியாக தன்னை பாவித்து பாடும் மாணிக்கவாசகர் இறைவனை முடிவில்லாத அமிழ்தம் போன்றவனே! கிடைத்தற்கு அரிய பொருளே! என்னை நீ ஆட்கொள்ளவில்லையானால் நான் இவ்வுலகில் உயிர் வாழ மாட்டேன் என்கிறார்.

'அந்தம் இல்அமுதே அரும்பெரும்பொருளே
ஆர் அமுதே அடியேனை
வந்து உய்ய ஆண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரியாய்'

என்ற பாடல் வாயிலாக வெளிப்படுத்துகிறார் (Thantapaanidhesikar, 2017). மேலும் அன்பு கொண்ட காதலனோடு ஊடல் கொள்வது காதலர்களிடையே சாதாரணமாக நடைபெறும். வழக்கமாகும். இதே ஊடல் நிலையையும் மாணிக்கவாசகர்,

'ஊடுவது உன்னோடு உவப்பதும் உன்னை
உணர்த்துவது உனக்கு எனக்கு உறுதி'

என்ற பாடலின் வரியலாக, சண்டையிடுதலும் மகிழ்ச்சியடைதலும் உன்னுடன் தவிர பிற யாருடனும் இல்லை என்று கூறும் அவரது கூறுறு புலப்படுத்தபடுவதை உணரலாம். உலக இன்பம் என்பது இறையின்பத்தின் பாற்பட்டதே என்னும் கருத்து இவற்றின் வழி அறியமுடிகிறது. (Thantapaanidhesikar, 2017)

## மாணிக்கவாசகம்

மாணிக்கவாசகரது பெயர் பழைய கல்வெட்டுகளில் 'திருவாதவூரர்''திருவாதவூராளி நாயனார்' என்று குறிக்கப்பட்டுள்ளது. இறைவனின் புகழை விரித்துரைக்கும் பாடல்களைக் கொண்ட தம்படைப்பான திருவாசகத்தை 'மணிவார்த்தை' என்ற பெயரால் அடிகள் குறிப்பிட்டுள்ளமையை,

'சிந்தனை நின் றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணினைநின் திருப்பாத போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி'
'பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை'

என்னும் பாடலடிகளின் வழி அறியலாம். மேலும், உமாபதி சிவாச்சாரியாரின்,

'பேசுபுகழ் வாதவூர் பிறந்து பெருந்துறைக்கடலுண்
டாசிலெழி றடித்தயர வஞ்செழுத்தா லதிர்ந்தெழுந்து
தேசமலி தரப்பொதுவார் சிவபோக மிகவிளைவான்
வாசகமா மாணிக்க மழைபொழிமா முகில் போற்றி'

என்ற பாடலடிகளில் திருவாதவூரரின் எட்டாம் திருமுறைப் பாடல்களை மாணிக்கவாசகம் என்ற பெயரால் சுட்டியுள்ளமையை கருதமுடிகிறது.

இவரை போன்றே மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும்,

'மன்ன நன்மணியே வார்த்தையாய் திரண்டு
வருமொரு காரணக் குறியால்
அன்ன மாணிக்க வாசகரெனும்பே
ராகவின் றாதியென் றறைந்தார்'

என்ற பாடலின் வரிகளுக்கு கேற்ப இத்திருமுறையை அருளிய திருவாதவூரடிகளுக்கு மாணிக்கவாசகர் என்ற சிறப்பு பெயரும் தோன்றி வழங்கியது என அறியலாம்.

## திருவாசகத்தில் நீராடல்

மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவை என்னும் பதிகத்தில் இருபது பாடல்கள் காணப்படுகின்றன. பக்தி இலக்கியங்கள் சக்திகள் ஒன்பதுபேர் என்கின்றன. அம்பிகை, கணாம்பகை, கௌரி, கங்கை. உமை, பராசக்தி. ஆதிசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்பர் சிலர். மனோன்மணி, சர்வ பூததமணி, பலாப்பிரமதனி, பலவிகாணி, கலவிகாணி, காளி. ரௌத்திரி, சேஷ்டை, வாமை என்றும் சிலர் கூறுவர் என்பதனை அறிய இயலும். நவசக்திகளின் ஆற்றல் வெளிப்படும் நிலையில் இப்பதிகம் அமைந்துள்ளது. இப்பதிகத்தில் ஐந்தொழில்களைச் செய்பவராக நடராசப் பெருமான் காட்டப்படுகிறார். மார்கழித் திருவாதிரை நாளில் பத்து நாட்களும் நடராசப் பெருமானை முன்னர் பாடி வழிபடும் சிறப்பினை உடையது திருவெம்பாவை என்பது அறியமுடிகிறது.

## திருவெம்பாவை

மாதங்களும் சிறந்ததாக கருதப்படும் மார்கழி மாதத்தில் அதிகாலை நான்கு மணியிலிருந்து ஆறுமணிவரையில் பிரம்மமுகூர்த்தம், கடவுள் வழிபாட்டிற்கு உகந்த நேரம். அந்த நேரத்தில் பெண்கள் உறக்கத்தை விடுத்து மற்ற பெண்களுடன் சேர்ந்து ஒருவரையொருவர் எழுப்பி கொண்டு நீராடச் சென்று நீராடிய பிறகு சிவபெருமானை வழிபடும் முறையில் அமைந்த இலக்கியமே திருவெம்பாவை.

திருவெம்பாவை இருபது பாடல்களைக் கொண்டுள்ளது. இதன் ஒவ்வொரு பாடலின் இறுதியில் எம்பாவாய் என்று பெண்களை துயிலெழுப்பும் நோக்கில் அமைந்துள்ளன. இதில் எம்பாவாய் என்பது (எம்ñ பாவை ® எம்பாவை) எம்பாவை என்றதன் விளியேற்ற நிலை ஆகும். இதற்கு பாவை போன்ற எமது பெண்ணே என்பது பொருள் எனப்படும். மாணிக்கவாசகர் வாழ்ந்த காலத்தில் பெண்களின் பழக்கமுறையைக் கொண்டு தமது திருவெம்பாவையை இயற்றியுள்ளர். இயல்பான மகளிர் நோன்பை மாணிக்கவாசகர் தமது இறை அனுபவத்தை சொல்வதற்காகப் பயன்படுத்தியுள்ளார்.

உலக மக்கள் சிற்றின்பங்களில் மூழ்கியிருக்காமல் பேரின்ப மயமான இறைவனை நினைத்து மனதில் உள்ள அழுக்குகளை அகன்றி இறைவனின் அருளைப்பெற வேண்டும் என்று திருவெம்பாவையில் உணர்த்தப்படுகிறது. 'திருவண்ணாமலையில் மாணிக்கவாசகர் தங்கியிருந்தபொழுது மார்கழி விடியலில் மகளிர் நீராட ஒருவரையொருவர் எழுப்பி கொண்டு குழுவாக சேர்த்து சென்று நீராடிய நிகழ்ச்சியைக் கண்டு அம்முறையில் உருவாக்கப்பட்ட இலக்கியமே திருவெம்பாவை' என்கிறார்.

திருவெம்பாவை பாடல்கள் இறைவன் சிவனை பற்றிய ஆழ்ந்த சிந்தனையைக் கொண்டு விளங்குகின்றன. மாணிக்கவாசகர் திருவெம்பாவையை எளியவரும் உணர்கின்ற வகையில் பாடியுள்ளார். மாணிக்கவாசகர் தமது இயல்பு வாழ்க்கையை துறந்து பல்வேறு சிவ ஆவயங்களுக்கு சென்று வழிபடுவது வழக்கம். மாணிக்கவாசகர் திருவண்ணாமலையில்

தங்கியிருந்த பொழுது அங்கு இருந்த பெண்களின் பழக்கவழக்கங்களை அடிப்படையாக கொண்டு திருவெம்பாவையை பாடியுள்ளார். திருவெம்பாவை தோற்றம் பற்றி கடவுள் மாமுனிவர் குறிப்பிடும் செய்தியை பி.ஸ்ரீ என்பவர் தமது நூலில், 'சிதம்பரத்திற் போகும் வழியில் மாணிக்கவாசகர் திருவண்ணாமலையில் தங்கியிருந்த பொழுது மார்கழி மாதம் திரவாதிரைக்கு முன் அதிகாலையில் பெண்கள் ஒருவரையொருவர் அழைத்து கொண்ட நீராட போவதை பார்த்து அந்த பெண்கள் பாடுகிற முறையாக திருவெம்பாவையை அமைத்து பாடினார் என்பது திருவாதவசர் புராணத்தில் கடவுள் மாமுனிவர் என்ற அதன் ஆசிரியர் தெரிவிக்கும் செய்தி' என்பதை இதன் வாயிலாக அறியலாம் (Kathir Murugu, 2016).

## திருவெம்பாவை பாடிய திருத்தலம்

மாணிக்கவாசகர் திருவெம்பாவை பாடல்களை எங்கும் பாடினார் என்பதில் இன்றளவும் ஐயம் நிலவுகிறது. திருவெம்பாவை திருவண்ணாமலையில் பாடப்பட்டது என்றும், தில்லையில் பாடப்பட்டது. என்றும் திருப்பெருந்துறையில் பாடப்பட்டது என்றும் கூறுவர் மூன்று இடங்களில் எங்கிருந்தும் பாடியிருக்கலாம் என்பதும் ஆய்வாளர் பலரது கருத்து இதனை பி. ஸ்ரீ என்பவர் தமது நூலில்,'மாணிக்கவாசகர் திருவண்ணாமலை, தில்லை, திருப்பெருந்துறை ஆகிய மூன்று இடங்களில் அந்த இடத்திலிருந்து அருளிச் செய்திருந்தாலும் மக்கள் வாழ்க்கையையும் பொழுது போக்கையும் ஒட்டியே தெய்வ தொடர்பு உள்ள பாட்டாக திருவெம்பாவையை பாடியிருக்கிறார் என்று ஊகிப்பது பொருத்தம் தான்' என்கிறார் (Kathir Murugu, 2016).

திருவெம்பாவை பாடபெற்ற இடத்தை ஆராயும் பொழுது பாடல்களில் இடம்பெற்றுள்ள தில்லை, திருப்பெருந்துறை, திருவண்ணாமலை ஆகிய இடங்களை பற்றி வரும் செய்திகளை கொண்டு பாடப்பெற்ற இடத்தை ஆராயலாம்.

## திருவெம்பாவையின் உட்கருத்து

திருவாசக திருவெம்பாவையை சொல் அழகு, பொருள் அழகு ஆகியவை சேர்ந்து அமைந்த நல்ல கவிதை என்கின்றனர் சிலர். வேறு சிலர் தத்துவக் கருத்துடன் அமைந்தது என்பர். இதில் தத்துவ கருத்து என்பது நவசக்திகள் எனப்படும் ஒன்பது சக்திகள் ஒருவரையொருவர் எழுப்புவதாக கூறியதாகும். திருவெம்பாவை கவிதை நயத்துடன் அமைந்துள்ளது என்கின்றனர் சிலர். இதனை டாக். ச. தண்டபாணி தேசிகர் கூறுகையில்,

'சிலர் பெண்கள் ஒருவரையொருவர் எழுப்புவதாக இலக்கியநயம் தோன்ற எழுப்பட்டதேயன்றி தத்துவக் கருத்தமைய எழுந்தன்று. ஆகவே இதற்கு நவசக்திகளை கொண்டு வந்து நிறுத்தி இடர்ப்பட்டு பொருள்களான வேண்டியதில்லை என்பர்' என்பதை எடுத்தாளப்படுகிறது.

திருவெம்பாவையில் இலக்கிய சுவையுடன் தத்துவக் கருத்தும் அமைந்துள்ளது. இது நோக்குபவரின் தன்மையை பொறுத்துள்ளது. இப்பாடல்களில் எளிமையான பொருள்களையும் காணலாம். ஆழமான தத்துவக் கருத்துக்களையும் அறியலாம். வேறு சிலர்

திருவெம்பாவையின் தலைக்குறிப்பாக அமைந்திருக்கும் சக்தியை வியந்தது என்பதற்கு பராசக்தி வழிபாட்டை அடிப்படைப் பொருளாக உடையது என்கின்றார் (Kathir Murugu, 2016).

## திருக்கோவையார்

கோவை பிரபந்தங்களில் முதலில் தோன்றிய இலக்கியம் ஆகும். இதில் கட்டளை கலித்துறையில் அமைந்த 400 பாடல்களை 25 பகுதிகளாக அமைந்துள்ளன. கோவையில் பாட்டுடைத் தலைவனாக இறைவனே பாடப்பட்டுள்ளார். மாணிக்கவாசகர் இந்நூலில் சிற்றின்பம், பேரின்பம் ஆகியவை பற்றிய செய்திகளை அறியமுடிகின்றது.

திருக்கோவை - ஆரணம்,'ஏரணம்' 'எழுத்து' காமநூல் என்றெல்லாம் குறிக்கப்படுகிறது என்கிறார் மது.ச.விமலானந்தம், திருக்கோவையாரும், திருவாசகமும் எட்டாந் திருமுறையாக விளங்குகின்றன. பாவை பாடிய வாயால் கோவை பாடுக என்று சிவபெருமானே மாணிக்கவாசகரிடம் வேண்ட மாணிக்கவாசகர் கோவையைப் பாடினார் என்பது வரலாறு.

## திருவெம்பாவை அமைப்பு

திருவெம்பாவை பாடல்கள் வெண்டளையால் வந்த இயற்றரவிணைக் கொச்சக கலிப்பாவால் ஆனது என்கின்றனர் உரையாசிரியர்கள். இப்பாடல்களில் பெண்கள் ஒருவரையொருவர் துயில் எழுப்பி கடித்துரைத்தும், விளையாடியும் நகைசுவையுடன் உரையாடியும் இறைவனை பாடுவதாக அமைந்துள்ளது. இறைவன் சிவனையும், உமாதேவியையும் இணைத்து போற்றும் பாடல்களையும் காணமுடிகிறது.

## முதல் எட்டுப் பாடல்கள்

திருவெம்பாவையில் முதல் எட்டுப் பாடல்களும் பெண்கள் ஒரவவரையொருவர் துயில் எழுப்புவதாக அமைந்த பாடல்கள் ஆகும். இப்பாடல்களின் வாயிலாக பெண்களின் சிறுசிறு விளையாடல்கள் புலப்படுகிறது. கொஞ்சி பேசுதல், இடித்துரைக்கும் பேச்சுகள், பூசல்கள், மனமுருகி பாடும் நிலை பெண்களின் பக்திப்பரவசம் போன்றவை அமைந்துள்ளன. பெண்களுக்கிடையே உள்ள ஒற்றுமையைக் கூறவதன் மூலம் அவர்க்கிடையேயான நட்புறவு வெளிப்படுத்தப்படுகிறது. முதற்பாடலில் ஏழாத தோழியை எழுப்பி இறைவனுடைய திருவருள்நிலை உணர்த்த பெறுகிறது. இப்பாடலில் உறங்குகின்ற பெண் உணர்வதற்காக மற்றொரு பெண்ணின் பக்தி பரவச நிலையை எடுத்துக் கூறி அவளை எழுப்புவதாக பாடலை அமைத்துள்ளார் மாணிக்கவாசகர் இதனை,

'ஏதேனு மாகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்'

என்கிற திருவெம்பாவைப் பாடல் அடிகள் உணர்த்துகின்றன. இரண்டாவது பாடலில் மகளிர் உரையாடல் இடம்பெறுகிறது. துயில் எழுப்ப வந்த பெண்கள் உறங்குபவளை நோக்கி இடித்துரைப்பதும், உறங்கிக் கெண்டிருந்தவள் உங்கள் விளையாட்டுகளுக்கு இது நேரமில்லை எனக் கூறுவதாகவும் இப்பாடல் அமைந்துள்ளது. மூன்றாவது பாடலில் வழிபடுவதில் அனுபவம் வாய்ந்தவர்கள் ஒரு நிலையாகவும், புதியவர்கள் ஒரு நிலையாகவும் இரண்டு

நிலைகள் கூறப்பட்டுள்ளது. நீண்ட காலமாக ஈசுவரனுக்கு அடியவர்களாக இருக்கும் பெண்கள், புதிதாக இவ்வழிபாட்டில் இடம்பெறும் பெண்களுக்கு அவர்களது குறைகளை சுட்டிக்காட்டி வழிகாட்டுவதாக அமைத்துள்ளார் மாணிக்கவாசகர். முதல் எட்டுப்பாடல்களில் அடுத்து வரும் பாடல்களனைத்தும் பெண்கள் உரையாடும் பாடல்களாகவே அமைந்துள்ளன.

### ஒன்பதாம் பாடல்

பெண்கள் தங்களுக்கு நல்ல கணவர் அமைய வேண்டும் என்று பாவை நோன்பின் இரு நோக்கங்களில் ஒன்றை வேண்டுதல் இப்பாடலில் இடம்பெறுகிறது. இறைவனை தொழும் சிவனடியார்களையே கணவராக அடைந்தால் வாழ்வு சிறக்கும் என்ற பெண்களின் உள்நோக்கம் இப்பாடலில் புலனாகிறது.

'இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்'

என்ற பாடலின் வாயிலாக நாங்கள் வேண்டும் வரம் இதுவே. இறைவனை எம் இறைவனாகிய நீ இதனை எனக்கு தந்தாய் என்றால் ஒரு குறையும் இன்றி வாழ்வோம் என அறியமுடிகிறது.

### பத்தாம் பாடல்

இறைவன் சிவபெருமானே பாடுவதற்காக நீராட செல்லும் பெண்களிடம் இறைவனுடைய பெருமைகள், உமையவளை ஒரு பக்கமாக கொண்டிருக்கும் அவன் தனக்கென ஓர் உருவமும் அற்றவன். அடியவர்களின் உள்ளத்தில் கோயிலாக கொண்டு குடியிருப்பவன் அத்தகையே சிவபெருமான் என்று என்று எடுத்துரைத்துகிறது.

### பதினொன்றாம் பாடல்

இப்பாடலிலிருந்து பெண்கள் நீராடல் தொடங்குகிறது. பெண்கள் தாங்கள் குளிப்பதையும் வழிபாட்டு நிலையையும் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளன. பெண்கள் இறைவனை நோக்கி அடியவராக வாழும் நிலையை கூறுவதாகவும், அந்நிலையிலிருந்து தளர்ச்சியுறாமல் காக்கவும் வேண்டும் நிலை புலப்படுகிறது.

'மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையால் குடைந்து குடைந்துஉன் கழல்பாடி
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்ந் தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்'

எம் இறைவனே! நெருப்பினைப் போல் சிவந்த மேனியினை உடையவனே! திருவருட் செல்வனாய்த் திகழ்பவனே! அழகNனு நீயோ ஆட்கொண்டருளும் விளையாட்டினை நிகழ்த்தி வருபவன். உனது அடியார்களே நற்கதி அடைவார்கள் எம்மை மீண்டும் பிறவிக் கடலுல் தள்ளி விடாமற் காப்பாயாக! என்று கருதமுடிகிறது.

## பன்னிரண்டாம் பாடல்

இப்பாடலில் பெண்கள் அனைவரும் நீராடி கொண்டிருக்கும் பொழுது இறைவனுடைய புகழைப் பாடுவதாக அமைந்துள்ளார் மாணிக்கவாசகர். இப்பாடலின் வாயிலாக பெண்களின் நீராடும் தன்மையும் இடம்பெறுகிறது.

'ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்'

என்ற பாடலின் வாயிலாக, தில்லைப் பொன்னம்பலத்தில் தீயினை கையிலேந்தி நடனமிடுகின்ற கூத்தனும் அவன் வான், நீர், தீ, காற்று, நிலம் என்னும் ஐந்தினையும் காத்தும், படைத்தும், அழித்தும் அலகிலா விளையாட்டினை விளையாடி வருபவனும் அவன் என அறியமுடிகிறது.

## பதின்மூன்றாம் பாடல்

பெண்களை நீராடுவதற்குரிய பொய்கைப் பற்றிய குறிப்புகள் இடம்பெறுகிறது. பொய்கையின் ஒவ்வொரு தன்மையும் இறைவன், இறைவி ஆகிய இருவரின் நிலைக்கும் சிலேடையாக அமைந்துள்ளது. இப்பாடலில் பொய்கையானது அம்மையப்பனை நினைவூட்டுகிறது என்பதனை அறியலாம்.

'பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்'

என்ற பாடலின் வாயிலாக என் இனிய தோழியே! பசிய காம்பினை உடைய கரிய குவளைகள் மலர்ந்துள்ளன. நாம் நீராட புகும் நீர்நிலையை ஒரு கணம் உற்று நோக்குவய் என அறியமுடிகிறது. நமது கைகளில் அணிந்துள்ள சங்கு வளையல்கள் ஓசை எழுப்பிட, கால்களில் அணிந்துள்ள சிலம்பகள் ஆர்த்திட, நாம் ஆடும் நீர் வளைந்து வளைந்து மேலே கிளம்ப இந்த அழகுமிகு பொய்கையில் நீராடி மகிழ்வோமாக என புலப்படுகிறது.

## பதினான்காம் பாடல்

உமையம்மையின் திருவடிச் சிறப்பை பாடிக் கொண்டு பெண்கள் நீராடும் பொழுது அவர்களின் அணிகலன்களின் தன்மையும் சிவனை பாடும் நிலையும் பெண்கள் தாங்களே உரையாடுவதாக இப்பாடலில் அமைத்துள்ளார் மாணிக்கவாசகர்.

'காதார் குழையாடப் பைம்பூண் கலன்ஆடக்
கோதை குழலாட வண்டின் குழாம்ஆடச்
போதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்'

என்ற பாடல் வரிகளில் பெண்ணே! நமது காதணியாகிய குழைகள் ஆடிடவும் பசும்பொன்னால் ஆன பிற அணிகலன்களும், மலரு அணிந்த கூந்தல் அசைந்திடவும் குளிர்ச்சியான நீரிலே நாம் குளித்து எழுவோம் என அறியமுடிகிறது.

### பதினைந்தாம் பாடல்

இறைவன் தம்மை போற்றிப்பாடி நீராடும் ஒரு பெண்ணை ஆட்கொள்ளும் நிலையை மையமாக வைத்து இப்பாடல் அமைந்துள்ளது. இறைவன் ஆட்கொள்ளும் பெண்ணின் நிலையை நீராடும் மற்ற பெண்கள் உரையாடுவதாக குறிப்பிடுகிறார் மாணிக்கவாசகர்.

'ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்'

என்ற பாடலுக்குகேற்ப மனத்தில் எழுந்த மகிழ்ச்சியால் அவளது கண்களிலிருந்து இடைவிடாமல் கண்ணீர்hனது ஒழுகிக் கொண்டிருக்கிறது. நம் பெருமானது திருவடிகளை வாயாரப் புகழ்ந்து பாடி, இந்த அழகான மலர்க் குளத்தில் துள்ளித் துள்ளி நீராடி பெண்கள் மகிழ்வார்கள் என கருதப்படுகிறது.

### பதினாறாம் பாடல்

மேகத்தை உமையம்மையின் திருவடிவத்திற்கு ஒப்பிட்டு கூறுகிறார் மாணிக்கவாசகர் மேகம் பற்றி வருவதால் இதனை மழைப்பாட்டு எனக் கருதுவது பொருந்தும். அஃதாவது பாவை நோன்பின் நோக்கங்களுள் ஒன்றான மழை வேண்டுதல் கருதி இப்பாடலில் மேகத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

'முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்'

என்ற பாடலின் வாயிலாக, ஏ...மேகமே! நீதான் கடலை அடைந்து அங்குள்ள நீரை முகந்து மேலே எழுவாயாக. சக்தி வடிவாய் ஆட்சி செய்பவள் அவள். அவளை கொஞ்சமும் விட்டு பிரியாதவன் எம் இறைவன் ஆவான். அவள் பொழியும் அந்த அருளினை போல நீ மழையினைப் பொழிவாயாக என்று அறியமுடிகிறது.

### பதினேழாம் பாடல்

இப்பாடல் தேவர்களாலும் அறிய இயலாத இறைவன் சிவனின் திருக்கோலச் சிறப்பு, அடியவருக்கு அமுது போன்று விளங்குபவன் என்பதையும் பெண்கள் பாடிப் சுனைநீரால் நீராடுவதாக அமைந்துள்ளது.

'நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கய பூம்புனல் பாய்ந்(து) ஆடேலோர் எம்பாவாய்'

என்ற பாடல் வரிகளின், தோழியே! நம் பெருமானை என்னவென்று எண்ணி கொண்டாய்? தேவர்களாலும் காணமுடியாத செந்தாமரை மலர் போன்ற தமது திருவடிகளை

போற்றி அனைவரும் கண்டு மகிழும் வண்ணம் காட்டு அருள் செய்த சேவகன் அவன் எனக் கருதமுடிகிறது.

## பதினெட்டாம் பாடல்

இறைவனின் திருப்பெருமை உணர்த்தப்படும் பாடல். இதில் திருவண்ணாமலை தலச் சிறப்பும் இடம்பெறுகிறது. இறைவன் சிவபெருமான் அனைத்துமாக விளங்குபவன் என்பது இப்பாடலில் குறிக்கப்படும் கருத்து.

'கண்ணார் அமுமுதமாய் நின்றான் கழல்பாடிப்

பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந்(து) ஆடேலோர் எம்பாவாய்'

என்ற பாடலின் வரிகளுக்குகேற்ப, இவ்வுலகத்தில் உள்ள வெவ்வேறு பொருள்களாகவும் சிறப்புடன் கூடிய அமுதமாகவும் நிற்பவன் நம் சிவபெருமான். அவனது வீரக்கழல் அணிந்த திருவடிகளைப் பாடியவாறு மலர் நிறைந்த பொய்கையில் குளித்து மகிழ்வாயாக என அறியலாம்.

## பத்தொன்பதாம் பாடல்

பெண்கள் தங்களுக்கு சிவனடியார் அல்லாதோர் கணவர்களாக அமைந்து விடுவார்களோ என்று அஞ்சி நின் அன்பர் அல்லாதோரைக் கணவராக அடையமாட்டோம் என்று இறைவனிடமே வேண்டி நிற்றல் இப்பாடலின் கருத்து 'நல்ல கணவரை அடைய வேண்டும்' என்று பெண்களின் உள்நோக்கம் இப்பாடலில் வெளிப்படுகிறது.

'இங்கி பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்

எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்'

என்ற பாடல் வாயிலாக, எல்லாம் வல்ல எங்கள் பெருமானே! உனது கையில் பிள்ளை இந்தப் பிள்ளையை உனக்கே அடைக்கலமாக தந்து விட்டோம். கதிரவன் எங்கே உதித்தால் என்ன என்று நாங்கள் கவலை யற்றிருப்போம் பாவை மகளிர் வேண்டிக் கொண்டனர் என்று அறியலாம்.

## இருபதாம் பாடல்

இது திருவெம்பாவையின் இறுதிப்பாடலாக அமைவது சிவபெருமானின் திருவடிகளைப் போற்றியும், அத்திருவடிகள் நிகழ்த்தும் ஐந்தொழில்களையும் குறிப்பதாக இப்பாடல் அமைகிறது. உலக இயக்கங்கள் அனைத்திற்கும் காரணம் இறைவனின் திருவடிகள் என்று பெண்கள் பாடிவருவது இறுதிப் பிரார்த்தனையாக இடம்பெறுகிறது.

'போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்

போற்றியாம் மார்கழிநிர் ஆடேலோர் எம்பாவாய்'

என்ற பாடலின் வாயிலாக, இவ்வுலகத்து உயிர்களுக்கெல்லாம் முடிவிடமாய் விளங்கும் உனது திருவடிகள் இரண்டினையும் வணங்குகின்றோம். இறைவனே! நாங்கள் ஆண்டுதோறும் நிகழ்த்தி வரும் இந்த மார்கழி நோம்பினை வாழ்த்தி வணங்குகின்றோம்.

## திருப்பொற்சுண்ணம்

திரு பொன் சுண்ணம் ஸ்ரீ திருப்பொற்சுண்ணம் சுண்ணம் என்பது மகளிர் தலைதேய்த்துக் குளிப்பதற்கு பயன்படுத்தும் ஒருவகை நறுமணப்பொடி ஆகும். பொன்னை அதில் கலப்பதால் 'பொற் சுண்ணம்' என்று அழைக்கப்படுகிறது.

## உலக்கைப் பாட்டு

மாணிக்கவாசகர் தில்லைக்குச் சென்றிருந்தபோது, அவ்வூரில் உள்ள பெண்கள் கையில் அணிந்திருந்த வளைகள் ஒலிக்கவும், இடையில் கிண்கிணி என்ற அணிகலன் ஒலிக்கவும், கூந்தலில் அணிந்திருந்த மலர்களின் வண்டுகள் ஆரவாரிக்கவும், முகத்தில் வியர்வை துளிர்க்க, விழி இரண்டு அசைய சுண்ணம் இடித்தார்கள். தில்லை நடராச பெருமானின் எல்லையற்ற புகழை உலக்கைப்பாட்டாகப் பாடினார்கள். அதனை கேட்ட மாணிக்கவாசகர் 'திருப்பொற்சுண்ணம்' என்ற பெயரிட்டு இப்பதிகத்தைப் பாடியுள்ளார் என்பதனை அறியமுடிகிறது. இதனைப் பிள்ளைப்பாட்டு, உடற்பாட்டு. உலக்கைப்பாட்டு அவலிடி, வள்ளை முதலிய பெயர்களால் அறியலாம். இறைவனுக்கு பொற்சுண்ணம் இடிக்கும் இடத்தை சுத்தம் செய்து மெழுகி, தேவேலோகத்தில் உள்ள கற்பக மரத்தை நிலைநிறுத்தி. தீபங்கள் ஏற்றி, இடபக் கொடியினை உயர்த்தினார்கள். இறைவனாகிய சிவபெருமானை காண பிரம்மா, திருமால், இந்திரன் போன்றோரும் வந்துள்ளனர். அவர்கள் யாவரும் நமக்கு முன்னால் செல்லாதவாறு தடுத்து நிறுத்துவோம் என்று அடியார்கள் கூறுவதை அறியமுடிகின்றது.

## முடிவுரை

மாணிக்கவாசகரின் பக்தி நெறியில் சிவபெரமான் மீது அவர் கொண்ட பக்தி உணர்வும், பக்தி உணர்வால் இறைவன் மீத அவர் பாடிய பாடல்கள் சிறப்புகள் எடுத்தாளப்பட்டுள்ளன. தேவார மூவருக்கும் காலத்தால் முற்பட்ட திருமூலநாயனார் மேற்கொண்டவராக மாணிக்கவாசகர் அறியமுடிகிறது. இறையின்பத்தை அடைந்த மாணிக்கவாசகரின் செயல்பாடுகள், மாணிக்கவாசகர் பெயர் பழைய கல்வெட்டகளில் 'திருவாதவூரர்' திருவாதவூராளி நாயனார் என்று குறிக்கப்பட்டுள்ளதே அறியமுடிகிறது. மார்கழித் திருவாதிரை நாளில் பத்து நாட்களும் நடராசப் பெருமாள் முன்னர் பாடி வழிபடும் சிறப்பு உடையது திருவெம்பாவை என்பதை உணரமுடிகிறது. பெண்களின் பழக்கவழக்கங்களை அடிப்படையாக கொண்டு திருவெம்பாவையை பாடியுள்ளார். திருவெம்பாவையில் ஒருவரையொருவர் துயில் எழுப்பும் பாடல் அமைந்தன தோழியை எழுப்பி இறைவனுடைய திருவருள்நிலை உணர்த்தப் பெறுகிறது.

## References

[1] Thantapaanidhesikar, (2017) Thiruvasagm, Gowra Publications, Chennai, India
[2] Kathir Murugu, (2016) Thiruvembavai, Saradha pathippagam, Chennai, India

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License